DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.:239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw1 |
| Name | : | மார்கிரேட் மரியக்கன்னி |
| Father's / Husband's Name | : | அலெக்ஸான்டர் மேசெஸ் |
| Age | : | 65 |
| Religion | : | கிறிஸ்துவர் |
| Calling | : | ஓய்வு மாவட்ட பதிவாளர் |
| Caste | : | இந்து வீரசைவர் |
| Village | : | சேலம் தாலூக்கா |
| Date | : | 09.04.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

கு.வி.

வேலூரில் மாவட்ட பதிவாளராக நான் பணியில் இருந்தேன். நான் அங்கு ஆடிட்டராக இருந்தேன். இந்த சம்பவ சமயத்தன்று அரக்கோணத்தில் கூடுதல் பணி செய்து கொண்டிருந்தேன். அரக்கோணத்தில் கூடுதல் மாவட்ட பணியாளராக இருந்தபோது நிர்வாக பொறுப்பாளராக பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த புகாரும் வரவில்லை. பிரதிவாரம் திங்கட் கிழமைகளில் நான் அரக்கோணத்திற்கு செல்வேன். அங்கு என்னென் நடக்கின்றது என்று ஆடிட் செய்வதுதான் என்னுடைய வேலை என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் நிர்வாகம் என்பவர்தான் மக்களிடமிருந்து வரும் புகார் மற்றும் சீட்டுகளை பார்ப்பார் என்றால் சரிதான். ஐ.ஜி. பதிவுத்துறையிடம் இருந்து வரபெற்ற கடிதத்தின்பேரில்தான் நான் ஆய்வுக்கு சென்றேன் என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாலாஜா பதிவாளர் அலுவலகத்தில் எதற்காக ஆவணத்தை பென்டிங் வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஐந்தாயிர ரூபாய் முத்திரை தாள்கள் ஐ.ஜி. ஆபிஸிலிருந்து சொன்னதன் பேரில்தான் அது பொய்யான ஆவணம் என்று தெரிய வந்தது. இது சம்மந்தமாக மேல் அதிகாரிகளுக்கு ஆய்வின் நிலையை குறித்து ரிப்போர்ட் அனுப்பினீர்களா என்றால் இல்லை. இது போன்ற சந்தர்பங்களில் சார் பதிவாளர் புகார் கொடுப்பார் அப்படியில்லையென்றால் சப் ரிஜிஸ்டார் சென்று பார்வையிட்டு பிரச்சணை இருக்குமேயானால் சார் பதிவாளர் புகார் கொடுக்காத பட்சத்தில் கொடுக்கலாம்.

WEB COPY

அப்படித் தான் நான் புகார் கொடுத்தேன். சம்மந்தப்பட்ட ஆவணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஏன் பென்டிங் வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது எனக்கு ஞாபகம் இல்லை. மதிப்பீட்டு குறைவினால் அந்த ஆவணம் பென்டிங் வைக்கப்பட்டிருக்கலாம் என்றால் இருக்கலாம். சம்மந்தப்பட்ட இரண்டு முத்திரை தாள்கள் ஸ்ரீ பெரும்புத்தூர் குமார் என்ற சொல்லக்கூடிய முத்திரை தாள் விற்பனையாளர் சீல் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட ஆவணத்தை நான் பார்த்தேன் அதில் உள்ள பத்திரங்கள் போலியானதா என்பதை நான் ஆராய்ந்து பார்க்கவில்லை. நான் வேலூர் சி.பி.சி.ஐடியில் புகார் கொடுத்தேன். ஐ.ஜி சொன்னதன் அடிப்படையில் தான் வேலூரில் உள்ள சி.பி.சி.ஐடி யில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வேலூரி சி.பி.சி.ஐடி என்னை சி.பி.சி.ஐடி தலைமையகத்தில் புகார் கொடுக்கும்படி சொல்லிவிட்டார்கள். இதனை ஐ.ஜி. பதிவாளருக்கு தெரிவித்தேன். நான் சென்னை சி.பி.சி.ஐடி யில் புகார் கொடுத்தேன். வேலூர் சி.பி.சி.ஐடி யில் புகார் வாங்கவில்லை என்பதால்தான் புகாரை சென்னை சி.பி.சி.ஐடி யில் கொடுத்தேன் என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த புகாரானது பொய்யான புகார் என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுப்பதற்கு உங்களுக்கு முகாந்திரம் இல்லையென்றும் சம்மந்தப்பட்ட வாலாஜா சார் பதிவாளர்தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்றும் பதிவுத்துறை மேல் அதிகாரிகளின் நிர்பந்தத்தின்பேரில் புகார் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பதிவுத் துறை தலைவர் சொன்னதன்பேரில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

WEB COPY

DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.: 239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw2 |
| Name | : | சரவணன் |
| Father's / Husband's Name | : | சி.முத்துராமன் |
| Age | : | 50 |
| Religion | : | இந்து |
| Calling | : | பிஸ்னஸ் |
| Caste | : | மறவர் |
| Village | : | சென்னை |
| Date | : | 09.04.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

WEB COPY

நான் சென்னை பர்மா பஜாரில் வெளிநாட்டுப் பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தேன். சென்னை ஸெகன்ட் லைன் கடற்கறை சாலையில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடையில் டி.வி., டி.வி.டி. போன்ற எலக்ட்ரானிக் வியாபாரம் செய்து வந்தேன். அப்போது முத்து இராமலிங்க தேவர் என்பவர் வெளிநாட்டு பொருட்களை வாங்க விற்க என் கடைக்கு வந்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். முத்து இராமலிங்க தேவரின் சொந்த ஊர் என்னுடைய பக்கத்து ஊர் என்பதால் அவர் எனக்கு பரிட்சியமானவர். ஒரு நாள் சாயல்குடி கூரான் கோட்டையை சேர்ந்த கடற்கறை வேலு என்பவரை முத்து இராமலிங்க தேவர் எனக்கு அறிமுகப்படுத்திவைத்தார். மேற்படி நபர் கஷ்ட நிலையில் உள்ளார் என்றும் குழந்தைக்குட்டிகளை வைத்து மிகவும் கஷ்டப்படுகிறார் என்றும் அவருக்கு எதாவது உதவி செய்யுங்கள் என்று சொன்னார். நானும் என்னால் முடிந்த உதவியை செய்கிறேன் என்று சொல்லியனுப்பினேன். பிறகு ஒரு மாதம் கழித்து கடற்கறை வேலு அவர்கள் என்னிடம் வந்து ஐயாயிரம் மற்றும் ஆயிரம் ரூபாய் பத்திரத் தாள்களை என்னிடம் காணிப்பித்தார். அந்த பத்திரத் தாளை ஒரு பொய்யான பத்திரத் தாள்களாக அச்சடித்து தரும்படி என்னிடம் கேட்டார். அப்போது நான் இதுபற்றி எனக்கு ஒன்று தெரியாது போலி லாட்ரி டிக்கெட் அடிக்கும் வியாசர்பாடியை சேர்ந்த மாயா (எ) மாய கிருஷ்ணனை தெரியும் நான் அவரிடம் கேட்டு சொல்கிறேன் என்று

அனுப்பினேன். மாய கிருஷ்ண்னன் இன்ஜின் ஆயில் வியாபாரம் செய்து வந்தார். நான் அவரை எப்பொழுதாவது பார்த்தால் அவரிடம் பேசுவேன். ஐயாயிரம் மற்றும் ஆயிரம் ரூபாய் பத்திரத் தாள்களை பொய்யான தாள்களாக அச்சடித்து தரமுடியுமா என்று கேட்டேன். ஸ்க்ரீன் பிரின்ட் மூலம் பொய்யாக தயார் செய்யும் டி.நகரை சேர்ந்த ஜாபர் என்பவரை தெரியும் நான் அவரைக் கேட்டு சொல்கிறேன் என்று மாயக் கிருஷ்ணன் என்னிடம் கூறினார். ஒரு வாரம் கழித்து மாய கிருஷ்ணன் என்னிடம் வந்து போலியான முத்திரை தாள்கள் அச்சடித்து தரவேண்டும் என்றால் எனக்கு அட்வான்ஸாக நாற்பதாயிரம் பணம் வேண்டும் என்றும் அந்த பணத்தை கொடுக்க வேண்டிய பணத்திலிருந்து கழித்து கொள்ளலாம் என்று சொன்னார். பிறகு போலி தாள்கள் அச்சடிக்கக்கூடிய செவன் ஸ்டார் கடையில் தாள்கள் வாங்கினார் நன்றாக இருக்கும் என்று சொல்லி என்னையும் அழைத்து சென்று தாள்கள் வாங்கினார். பிறகு ஒரு மாதம் கழித்து ஐயாயிரம் மற்றும் ஆயிரம் ரூபாய் தாள்களை கடற்கறை வேலு என்னிடம் காண்பித்து ஐயாயிரம் ரூபாய் தாள்களை 1,200 ரூபாய்கும் ஆயிரம் ரூபாய் தாள்களை 300 ரூபாய்கும் மதிப்புப் போட்டு அவரிடம் கொடுத்தோம். எம்.கே.பி நகர் மதன் டைலர் கடையில்தான் மாய கிருஷண்னன், ஜாபர் அலி மற்றும் கடற்கரை வேலு சந்தித்து பேசிக்கொள்வார்கள். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நான் அங்கு சென்றேன். மேற்படி மூன்று நபர்களும் அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் அப்போதுதான் மாய கிருஷ்ணன் ஆஜர் எதிரியை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். ஆஜர் எதிரியிடம் நீங்கள் அச்சடித்துக் கொடுத்த பிரின்ட் எதுவுமே சரியில்லை என்று சொன்னேன் அதற்கு அவர் அடுத்த முறை நன்றாக அடித்து தருகிறேன் என்று சொன்னார். இது போன்ற பொய்யான பத்திரங்களை வாங்கிக்கொண்டு கடற்கறை வேலு இராணிப்பேட்டை, வாலாஜா, வானியம்பாடி, ஆம்பூர் போன்ற இடங்களில் விற்பனை செய்து வந்தார். இப்படி செய்து கொண்டிருக்கும்போது ஒரு நாள் பத்திரிகையில் ஆம்பூர் வாலாஜா வானியம்பாடியில் போலி பத்திர தாள்கள் விற்பனை செய்தவர் போலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று செய்தித்தாளில் செய்தி வந்தது. கடற்கரை வேலுவை போலிஸார் அரஸ்ட் செய்தார்கள். நாம் வாங்கிக்கொடுத்த பத்திரம் தான் மாட்டிக்கொண்டது என்று தெரியும்போது வேலுவை அரஸ்ட் செய்தார்கள். வேலூர் ஆய்வாளர் அவர்கள் கடற்கறை வேலுவை அழைத்துவந்து கடையிலிருந்த என்னை அடையாளம் காட்ட பிறகு நான் மாய கிருஷ்ணனை அடையாளம் காட்டினேன். பிறகு மாய கிருஷ்ணன் ஆஜர் எதிரியை அடையாளம்

WEB COPY

காட்டினார். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி.

கடற்கறை வேலுவை கைது செய்யும் சம்பவம் நடப்பதற்கு முன்பு ஒரு ஆறு மாதங்களுக்கு முன்புதான் அவரை தெரியும். நீங்கள் பிரின்டிங் பிரஸ் வேலை எதாவது செய்து வந்தீர்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது. முத்து இராமலிங்க தேவர் மூலமாகத்தான் எனக்கு கடற்கறை வேலுவை எனக்கு தெரியும். முத்து இராமலிங்க தேவர் என்னுடைய கடையில் செல்போன் போன்ற பொருட்களுக்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். கடற்கறை வேலுவும் முத்து இராமலிங்க தேவரும் உறவினர்களா என்றால் எனக்கு தெரியாது அவர்கள் பக்கத்து பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். கடற்கறை வேலு மீது போலி லாட்ரி டிக்கெட் தயார் செய்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மாய கிருஷ்ணன் என்பவர்மீது அதுபோன்ற வழக்கு உள்ளது தெரியும். மாய கிருஷ்ணன், கடற்கறை வேலு, முத்து இராமலிங்க தேவர் ஆகிய மூன்று பேர் மீதும் வழக்கு உள்ளது தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாய கிருஷண்னன் அறிமுகப்படுத்தியதால்தான் ஆஜர் எதிரி ஜாபர் அலியை எனக்கு தெரியும். செவன் ஸ்டார் பேப்பர் கடைக்கு நானும் உடன் சென்றேன். என் மீதும் வழக்கு போட்டதால்தான் அப்ரூவராக ஆனேன் என்று சென்னால் சரியல்ல. போலிஸார் விசாரிக்கும்போது நடந்த விவரத்தை சொன்னேன். மாய கிருஷ்ணன் சொல்லிதான் மூவரும் மதன் டைலர் கடையில் சந்திப்பதாக தெரிந்து கொண்டேன். அப்படி யாரும் சந்திக்கொள்வதில்லை என்றும் காவல் துறையினருக்கு இணங்க நீங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சென்னை எழும்பூர் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரியை போலி லாட்ரி டிக்கெட் சம்மந்தமாக கைது செய்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி டி.நகர் பாண்டி பஜாரில் ஸ்கிரீன் பிரின்ட் தொழில் செய்து வருகிறார் என்றும் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கு சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

WEB COPY

DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.:239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw3 |
| Name | : | அன்பழகன் |
| Father's / Husband's Name | : | அப்பாசாமி |
| Age | : | 59 |
| Religion | : | இந்து |
| Calling | : | இராணுவம் ஆய்வு |
| Caste | : | ஆதிதிராவிடர் |
| Village | : | இராணிப்பேட்டை, நவல்பூர். |
| Date | : | 09.04.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

நான் இராணுவத்தில் பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது நான் நவல்பூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நவம்பர் 1999 ஆம் ஆண்டில் என்னுடைய மச்சான் விஜய இராகவன் மூலமாக நவல்பூரில் ரூ.1,40,000 பிளாட் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தோம். அந்த கிரையத்தை ரிஜிஸ்டர் செய்வதற்கு வாலாஜா பதிவு அலுவலகத்தில் என்னுடைய மைத்துனர் மூலமாக சுந்தர மூர்த்தி, கோட்டீஸ்வரன் ஆகியோரிடமிருந்து பத்திர செலவு மற்றும் எழுத்து கூலி சேர்த்து ரூ.20,890 செலவினங்களை என் மைத்துனர் மூலமாக சுந்தர மூர்த்தியிடம் கொடுத்து அவருடைய மகன் கோட்டீஸ்வரனிடம் கொடுத்ததால் அவர்கள் பத்திர பதிவு தயார் செய்து கொடுத்தார்கள். நாங்கள் பத்திர பதிவு செய்ய பதிவாளரிடம் கொடுத்துவிட்டு அதை பெற்றுக்கொள்வதற்கு என்னுடைய மைத்துனர் விஜய இராகவனிடம் பெற்றுக் கொள்ள நான் அனுமதித்து அவரிடமே பதிவு இரசீது கொடுத்துவிட்டு நான் இராணுவத்திற்கு சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் அசாஆ 3, அசாஆ 4 மற்றும் அசாஆ 5 பக்கங்கள் கொண்ட கிரையப் பத்திரம் நான் பதிவுசெய்ததுதான். அதன்பிறகு இருபது நாட்கள் கழித்து கடிதம் எழுதி கேட்டபோது பத்திரம் ஆய்விற்காக சென்றுள்ளது இன்னும் வரவில்லை என்றார். அதன்பிறகு 15 நாட்கள் விடுமுறையில் நான் வந்து கேட்டப்போது நான் பதிவுசெய்த பத்திரத்தின் பத்திரத் தாள்களில் இரண்டு ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பிலான தாள்கள் போலியானவை என்று சொல்லி என்னை விசாரணைக்கு வரவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். நான் வேலூர் சி.பி.சி.ஐடி அலுவலகத்திற்கு சென்றேன். நான் நடந்தவற்றை விசாரணையில் சொன்னேன். மேலும் அந்த விசாரணையில் நான் அரக்கோணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒரு கடிதம் கொடுத்தாக என்னிடம காட்டினார்கள்.

WEB COPY

அதை பரிசீலனை செய்து பார்த்தபோது அதை நான் வழங்கவில்லை என்றும் அதில் என்னுடைய கையெழுத்து இல்லையென்றும் சென்னேன். அதற்கு சி.பி.சி.ஐடி அலுவலகத்தில் என்னிடம் ஒப்புதல் கையெழுத்து வாங்கினார்கள். சுந்திரமூர்த்தி மற்றும் கோட்டீஸ்வரன் பணத்தை பெற்றுக்கொண்டு போலி முத்திரை தாள்கள் வைத்து என்னை ஏமாற்றி உள்ளார்கள் என்றும் அந்த முத்திரை தாள்கள் அவர்களே அதை பயன்படுத்தியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன். அவற்றை நான் வாங்கித் தரவில்லை என்றும் சொல்லியுள்ளேன். இது சம்மந்தமாக சி.பி.சி.ஐடி பேரிஸார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

கு.வி.

இராணுவத்தில் நான் பணியிலிருக்கும்போதுதான் நவல்பூரில் நிலம் வாங்கினேன். விஜய இராகவன் மூலமாக சுந்திர மூர்த்தி மற்றும் கோட்டீஸ்வரனிடம் பணம் கொடுத்தேன். காரையை சேர்ந்த ஜெய குமாரை நான் அழைத்து செல்லவில்லை அவர் பத்திர அலுவலகத்திலேயே இருந்தார். கோட்டீஸ்வரன் மற்றும் சுந்திர மூர்த்தியை எனக்கு நேரடியாக தெரியாது. நான் பணம் கொடுத்த அன்றைய தினமே பத்திரம் தயாரித்து கையெழுத்து வாங்கி அன்றே பதிவுக்கு கொடுத்துவிட்டார்கள். அந்த முத்திரை தாள்களை சுந்திர மூர்த்தியும் கோட்டீஸ்வரனும் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் எங்கு முத்திரை தாள்கள் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பத்திரத்தை திரும்ப வாங்கவே இல்லை. ஆய்வுக்காக போயிருக்கு என்று சொல்லி அந்த பத்திரத்தை பெண்டிங் வைத்தார்கள். கைட் லைன் வேல்யூ குறைவாக உள்ளது என்று சொல்லி பெண்டிங் வைத்தார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மாவட்ட பதிவாளரிடம் நான் எழுதிகொடுத்தாக சொல்லப்படும் அந்த கடிதத்தில் என்ன உள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் அரக்கோணம் மாவட்ட பதிவாளருக்கு இது சம்மந்தமாக நான் கடிதம் எதுவும் எழுதவில்லை. வேலூர் சி.பி.சி.ஐடி ஆலுவகத்தில் கடிதத்தை என்னிடம் காண்பித்தார்கள் அதில் என்னுடைய கையெழுத்து இல்லை. போலிஸார் விசாரிக்கும்போது அது பற்றிய விவரம் சொல்லவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் சி.பி.சி.ஐடி போலிஸார் சொன்னதன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

WEB COPY